கட்டடங்கள் இருக்கவேண்டும். சுற்றுப் பகுதியில் இடம் இருக்க வேண்டும். மேலும் தேவையானால் அந்தக் கட்டடத்தில் இப்போது வசதியில்லை என்றால், புது வசதிகளைச் செய்து தரவும் ஒன்றியம் ஓரளவிற்கு முன்வரவேண்டும். அப்படி அமைகிற இடமாகப் பார்த்து, இடவசதியைப் பார்த்து மருந்தகங்கள் அரசினரால் எடுக்கப்பட்டுள்ளன.

காச நோயாளிகளுக்கு உதவி.

*7. **வினா—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்** : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) க்ஷயரோக வியாதியால் கஷ்டப்படும் ஏழைகளுக்கு சர்க்கார் உதவிப்பணம் கொடுத்திருக்கிறதா ?

(இ) ஆம் எனில், எந்த அடிப்படையில் எவ்வளவு பணம் கொடுக்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) மருத்துவமனையில் தங்கி சிகிச்சைபெறும் பிணியாளராக இல்லாமல், வெளியிலிருந்து வந்து சிகிச்சைபெறும் பிணியாளராக தொடர்ந்து ஒரு மருத்துவமனையில் சிகிச்சை பெறும் ஒவ்வொரு காசநோயாளிக்கும் சில நிபந்தனைகளுக்குட்பட்டு ஓராண்டு காலத்திற்கு உதவித்தொகை மாதம் ரூபாய் 20 வீதம் கொடுக்கப்படுகிறது.

திரு. தி. ச. ஆ. சிவப்பிரகாசம் : தலைவரவர்களே, தற்சமயம் அரசாங்கம் கொடுக்கும் பணம் சத்துணவு வாங்கிச் சாப்பிடுவதற்குப் போதுமானதாக இல்லை என்பதை அரசு அறியுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, 1967 வரையில் ரூ. 10 தான் கொடுக்கப்பட்டு வந்தது. அதற்குப் பின்னர் தான் 1967-க்கு முன்னால் இருந்த காலகட்டம் அங்கத்தினர்கள் அறிவார்கள். ரூ. 10 போதாது என்று ரூ. 20 ஆக கொடுக்கப்பட்டது. இது உதவித் தொகையாகத்தான் கொடுக்கப்படுகிறது. புறப் பிணியாளர்கள் தொடர்ந்து காச நோய்க்கு மருந்தைப் பெற்றுச் சாப்பிடுவதற்கு ஊக்கம் அளிக்கப்படுகிற வகையில் தான் இந்தப் பணம் கொடுக்கப்படுகிறது. அவர்கள் 1½ ஆண்டு

1973 பிப்ரவரி 5]

காலத்திற்கு தவறுமல் இந்த மருந்தைச் சாப்பிடவேண்டியிருக்கிறது. இது உதவித் தொகையே தவிர, உணவுக்குச் செலவாகும் முழுத்தொகையும் அல்ல. அப்படி வழங்குவதற்கும் இயலாது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்த காச நோயாளிகளுக்குக் கொடுக்கப்படுகிற உதவித் தொகை 1967-ல் பிக்ஸ் செய்யப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் கூறினுர்கள். அதை அதிகப்படுத்த வேண்டுமென்று ஏதாவது பரிந்துரை நாகர்கோவிலில் உள்ள டி.பி. மருத்துவ மனையிலிருந்து வந்துள்ளதா? அப்படி வந்திருந்தால் அதன் விவரம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, நாகர்கோவில் மருத்துவமனையைப் பொறுத்தவரையில் உள் நோயாளிகளுக்கு வழங்கும் சிகிச்சை முக்கியத்துவம் பெறும். இது ஒவ்வொரு மாவட்ட மருத்துவ மனையிலும், வட்ட மருத்துவ மனையிலும் உள்ள புற பிணியாளர்களுக்கும்—டோமிசைல்ட் கிமோதராபி என்னும் வகையில் வீட்டிலிருந்து சிகிச்சை பெறும் பிணியாளர்களுக்கும் கொடுக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் நோயாளிகள் ஏழு லட்சம் மக்கள் இருக்கிறுர்கள். அவர்களில் ஒரு ஆண்டு வருமானம் ரூ. 1,500 அளவுக்கு மேல் இல்லை என்று சான்றிதழ் பெற்று விண்ணப்பிப்பவர்கட்கு இந்த உதவித் தொகை வழங்கப்படுகிறது. அவர்கள் ஏழ்மை நிலைமை காரணமாக பாதிக்கப்படாமல் தொடர்ந்து இந்த மருத்துவ சிகிச்சை பெற்று குணம் அடையவேண்டுமென்ற அடிப்படையில் இந்தத் தொகை உதவித் தொகையாக கொடுக்கப்படுகிறது.

புள்ளி விவர இன்ஸ்பெக்டர்கள்.

***8. வினு—திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1972-ம் ஆண்டு, ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் சர்வீஸ் கமிஷன் மூலமாக புள்ளி விவர இன்ஸ்பெக்டர்கள் (Statistical Inspectors) என்ற பதவிக்கு இன்டர்வியூக்கு அழைக்கப்பட்டவர் எத்தனை பேர்?

(இ) அதில் தேர்ந்தெடுக்கப்பட்டவர் எத்தனை பேர்?

(உ) அதில் முஸ்லீம்கள் எத்தனை பேர்?